# வன்னியர்களுக்கு பயனளிப்பது தலைவர் கலைஞர் வழங்கிய

# 20 சதவீத இடஒதுக்கீடா? 10.5 சதவீத உள் ஒதுக்கீடா?

**1989** ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்த நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் பல ஆண்டுகளாக தீர்க்கப்படாமல் இருந்த வன்னியர்களுக்கான இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்கு பா.ம.க நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள் முன்வைத்த கோரிக்கையை ஏற்று பிற்படுத் தப்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து (BC) வன்னியர் - சீர்மரபினர்" உள்ளிட்டோரை மிகவும் பிற்படுத்தப் பட்டோர் (MBC) என பிரிந்து 20 சதவீத இடஒதுக்கீட்டை வழங்கி அரசாணை GO வெளியிட்டார்கள்.

அரசாணை எண் 242 நாள்: 28.03.1989

இது குறித்து தலைவர் கலைஞர் தனது நெஞ்சுக்கு நீதி" நூலில் நான்காம் பாகம், பக்கம் - 36, 37, 38, 39ல் எழுதியுள்ளது. பின் வருமாறு :

டாக்டர் கலைஞர் - தமிழ்நாட்டில் ஒரு நீண்ட காலப் பிரச்சினை, தீர்க்கப்படா மலே இருந்தது. பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர்க்குக் கல்வி, வேலை வாய்ப்புகளில், தனித்தனி இடஒதுக்கீடு என்பது திராவிட இயக்கத்தின் சமுதாயப்புரட்சி சாதனையாக இருந்த போதிலும் குறிப்பிட்ட சில சமூகத்தினர், தங்களின் சமுதாயத்தின் மிகப் பின்தங்கிய நிலையை எடுத்துரைத்துத் தங்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயமாக அறிவித்து, அதற்கான தனி இடஒதுக்கீடு கோரிப் போராட்டங்களை நடத்தி வந்தனர். அதன் உச்சக்கட்டமாக இன்றைய பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்கள் தலைமையில் 1987ஆம் ஆண்டு பெரிய போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

அந்தப் போராட்டத்தை அடக்கிட அன்றிருந்த அ.தி.மு.க ஆட்சியினர் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தில் சுமார் 30 பேர் உயிரிழந்தார்கள். அதற்குப் பிறகும் அவர்களின் கோரிக்கை நிறைவேற்ற படாமலே இருந்தது. தி.மு.க ஆட்சிப் பொறுப் பேற்றவுடன் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்திடம் கூறி டாக்டர் இராமதாஸ் அவர்களை தன் வீட்டுக்கே அழைத்து அவரிடமும், வீரபாண்டி ஆறுமுகத்திடமும், தீரனிடமும் விவாதித்து அந்த விவாதத்தின் விளைவாக 13.03.1989 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வரலாற்றுப் புகழ்பெற்ற முடிவாக, மிகவும் பிற்படு த்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர்மரபி னருக்கும் இருபது சதவிகிதம் தனி இடஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவிக்கப் பட்டது. அந்த முடிவையொட்டி சில ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்கனவே இந்த இட ஒதுக்கீடு உரிமைப் போரில் பலியாகிவிட்ட சுமார் 30 பேர்களின் குடும்பங்க ளுக்குத் தலா மூன்று இலட்ச ரூபாயும், வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு அவ்வாறே முறைப்படி வழங்கப்பட்டது. மிகவும் பிற்படுத்தப்பட்டோர்க்கு 20 சதவீதமென கல்வி வேலை வாய்ப்புகளில் ஒதுக்கப்பட்டதால் அவர்களுக்குப் பல மடங்கு அதிகப் பயன் கிட்டியது என்பதை சமூக நீதியில் அக்கறையுள்ளோர் அனைவரும் இன்னமும் பாராட்டிக் கொண்டு இருக்கிறன்றனர் படரக் கொழுகொம்பின்றி தவித்துக் கொண்டிருந்த பச்சைக் கொடியை அழுத்தமான மரமொன்றில் தவழவிட்டு அதன் கிளைகளில் எல்லாம் படரவிட்டது போன்ற பூரிப்பை மிகவும் பின்தங்கிய சமுதாயத்து இளைஞர்கள் தங்கள் புன்னகை மூலம் வெளிப் படுத்தினர். ஏற்கனவே தி.மு.க ஆட்சியிலும், பின்னர் அ.தி.மு.க ஆட்சியிலும் படிப்படியாக விரிவடைந்த இட ஒதுக்கீடு இந்தப் புதிய ஆணையின் விளைவாக பொதுத் தொகுப்பில் (Open Competition) 31 சதவிகிதம், பிற்ப டுத்தப் பட்டோர்க்கு 30 சதவிகிதம், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் சீர்மரபினருக்கு 20 சதவிகிதம், தாழ்த்தப்பட்டோர்க்கு 18 சதவிகிதமும் ஆதிவாசிகளுக்கு 1 சதவிகிதம் என்பதாக அமைந்தது. அழுத்தப்பட்டுக் கிடக்கும் சமுதாயத்திலிருப்போரில், ஓரிருவருக்கு பதவி வாய்ப்புகள் அளிப்பதென்பது அவற்றை அளித்திட்ட நமக்கு ஆறுதல் அளிக்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் அதைவிட அந்த மொத்த சமுதாய மக்களும் முன்னேற்றம் பெற்றுப் பயனடையக் கூடிய வாய்ப்பு வசதிகளையும் உரிமைகளையும் அவர்களுக்கு வழங்குவதில் வெற்றி கிட்டுவதே முழுமையான மறுமலர்ச்சியாக இருக்க முடியும் என்ற உறுதியான எண்ணத்துடன் தான் தி.மு.க அரசு திட்டங்களைத் தீட்டியது, சட்டங்களை இயற்றியது. அப்போது கூட மிகப் பிற்படுத்தப் பட்டோர் பட்டியலில் உள்ள 107 சமூகங்களுக்கும் சேர்த்துத்தான் 20 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதிலே வன்னியர்களுக்கு குறைவாகத்தானே பலன்கிடைக்கும் என்றார்கள்.

அதுபற்றி 22.04.1989 அன்று நான் விளக்கமளித்த போது அந்தப் பட்டியலிலே 107 சமூகங்கள் என்று எண்ணிக்கையிலே இருந்த போதிலும், வன்னியர் மட்டும் தான் 68 லட்சம் பேராக 1989 ல் இருந்தனர். அந்தப் பட்டியலில் சீர்மரபினர் தவிர்த்து மற்ற வகுப்பினரை எடுத்துக் கொண்டால் பெரும்பாலான வகுப்புகளில் வெறும் ஆயிரக்கணக்கிலே தான் மக்கள் இருக்கிறார்கள். உதாரணமாக நரிக்குறவர்கள் 20,162 பேர், ஜோகி 19,848 பேர், யோகீஸ்வரர் 18,618பேர், தாசரி 15,907 பேர், பட்ராஜு 15,700 பேர், ஸ்ரீ வைஷ்ணவா 15,618 பேர், தொண்டமான் 14,036 பேர், குன்னுவர் மன்னாடி 11,055 பேர், நோக்கர் 7,559 பேர், மகேந்திரா 7,418 பேர், பேஸ்தா சிவியர் 7,963 பேர், மொண்டாடன் செட்டி 6,254 பேர், மொண்டு கொல்லா 5,700 பேர், புன்னான் வேட்டுவ கவுண்டர் 4,562 பேர், டொம்மாரா 4,436 பேர், குருகினி செட்டி 4,225 பேர், கொரச்சா 3,429 பேர், முட்லகம் பட்டி 1,575 பேர் ஜாம்புவனோடை 1,399 பேர், எரவல்லவர் 1,377 பேர் என்று இருபதாயிரத்திற்கு உட்பட்டவர்களே 20 சாதியினராகும். 20 ஆயிரத்திற்கும் குறைவாக உள்ளவர்களின் பட்டியலை மேலும் பார்த்தால் வேட்டுவ கவுண்டர் 17,430, ஒட்டர் 16,977, கந்தர்வக்கோட்டை கள்ளர் 14,556, போயாஸ் 12,478, ஆத்தூர் கீழ் நாடு குறவர் 7,994, உப்புக்குறவர் 7,626,

தெலுங்கப்பட்டி செட்டி 5,184, கொட்டப்பால் 4,888, ஜோகிஸ் 4,512, செங்கயம் புடி குறவர் 3,136, சேலம் உப்புக்குறவர் 2,782, சூரமரி ஒட்டர் 2,691, கலா குறவர் 887, தோகமலை குறவர் 512, குடுதாசரீஸ் 482, பட்டு துர்காஸ் 441, டோங்கா 287, டோம்ஸ் 260 மொண்டா கொல்லா 64, சாரங்காபள்ளி குறவர் 54, தொப்பை கொறச்சா 51, வயலபாடு அல்லது நாவல்பேடா கொறச்சா 15, என்று இது போன்ற எண்ணிக்கை கொண்டதை சமூதாயத்தையெல்லாம் சேர்த்துத்தான் 108 சமூகங்கள் என்று விளக்கினேன். (தலைவர் கலைஞர்).

**20 சதவீத இட ஒதுக்கீட்டில் தலைவர் கலைஞர் கையாண்ட திறன்.**

இட ஒதுக்கீட்டில் முழு ஈடுபாடும் தனித்தன்மையும் கொண்ட மதியூகி" நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞரோடு பிறரை ஒப்பிடுவது மலைக்கும், மடுவுக்கும் ( THE DIFFERENCE BETWEEN MOUNTAIN AND POND ) உள்ள வித்தியாசம் ஆகும். 1989ல் கலைஞர் தான் வன்னிய சமுதாயத்தின் இட ஒதுக்கீட்டிற்கு எந்த சட்டச் சிக்கலும் ஏற்படா வண்ணம் அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் சேர்த்து 20 சதவீத இடஒதுக்கீட்டை வழங்கியவர் டாக்டர் கலைஞர்.

THE "PRINCIPLE OF ELASTICITY IN RESERVATION" இடஒதுக்கீடு நெகிழ்வுத்தன்மையை குறிக்கோளாக கொண்டது என்பதற்கு ஏற்ப மிகவும் சாதுர்யமாக கையாண்டு

வன்னியர் சீர்மரபினர் " உள்ளிட்டோர் இட ஒதுக்கீட்டு பயனை அவரவர் அடையும்

வகையில் வழி அமைத்து 20 சதவீத இட ஒதுக்கீட்டு பயனை 108 சமூகங்கள் சீராக அனுபவிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியவர் நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் அதிலும் பெரும்பான்மையாக இருக்கும் வன்னியர்கள் உரிய பலனை அனுபவிக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளவர் தலைவர் கலைஞர் ஆவார்.

ஆங்கிலேயர் ஆட்சியில் அவர்களை கடுமையாக எதிர்த்ததால் பாதிக்கப்பட்டி ருக்கும் சீர்மரபினர் DENOTIFIED COMMUNITIES (DNC) உள்ளிட்ட 108 சமூகங்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC) என்ற புதிய பிரிவை ஏற்படுத்தி கல்வி, வேலை வாய்ப்பில் 20 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கியவர் தலைவர் கலைஞர் இதைத் தான் வன்னிய சமூகத்திற்கு இட ஒதுக்கீடு தந்தவர் கலைஞர் தான் என்பதை பா.ம.க நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள் சுக்கா... மிளகா சமூகநீதி " என்ற தனது புத்தகத்தில் என்ற பகுதியில் குறிப்பிட்டிருப்பது வருமாறு:

தமிழ் நாட்டிலும், இந்தியாவிலும் ஒவ்வொரு பிரிவினருக்கும் இட ஒதுக்கீடு கிடைத்த தன் பின்னணியில் ஒவ்வொரு வரலாறு



**குத்தாலம் பி.கல்யாணம்**
கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்

உண்டு . அந்த வரலாறுகள் அனைத்திலும் முதன்மையானது வன்னியர்கள் உள்ளிட்ட 107 சமுதாயங்கள் உள்ளடக்கிய மிகவும் பிற்படுத்த ப்பட்ட வகுப்பினருக்கு 20 சதவிகிதம் இடஒதுக்கீடு பெற்றுத் தந்த வரலாறு. அது தனித்துவமானது. அது ஒரு தியாக வரலாறு. 21 உயிர்களை பலிகொடுத்து ஏராளமானவர்கள் அடக்கு முறைகளை எதிர்கொண்டு சிறைகளில் வாடி பெற்றது தான் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 20 சதவீத இட ஒதுக்கீடு. **அதனால் தான் அந்த வகுப்பை சார்ந்த லட்சக் கணக்கான குடும்பங்கள் இன்று தலை நிமிர்ந்து வாழும் உரிமையையும் கௌரவமான வாழ்க்கை வாழும் நிலையையும் பெற்றுள்ளனர்.**

**கழக அரசின் சாதனையைப் பாராட்டிய மருத்துவர்அய்யா :**

1987ஆம் ஆண்டு முதல் இட ஒதுக்கீட்டுக்காக நாங்கள் போராடினோம். போராடினோம், 21 உயிர்களைப் பலி கொடுத்ததைத் தவிர ஒன்றும் நடக்கவில்லை. அன்றிருந்த அ.தி.மு.க முதலமைச்சரைப் பார்க்க 7 ஆண்டு காலம் மனு போட்டேன், பார்க்கவே முடிய வில்லை! ஆனால் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தார். வந்தவுடன் என்னைக் கூப்பிட்டு அனுப்பினார். என்னைக் கூப்பிட்டு இட ஒதுக்கீடு தந்த கலைஞர் அவர்களே! உங்களுக்கு என் நன்றி! இந்தச் சமுதாயம் என்றென்றும் உங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் மட்டும் 20 சதவிகிதம் இட ஒதுக்கீடு தரவில்லை என்றால், கூலி வேலை செய்து கொண்டு ஓட்டு மட்டும் போடுகின்ற ஒரு சமுதாயமாக இந்த ஒடுக்கப்பட்ட சமுதாயம் இருந்திருக்கும். அதை மாற்றிய பெருமை அதற்கு வழிவகுத்த பெருமை, கலைஞர் அவர்களையே சாரும்." என்று பெருமையோடு டாக்டர் மருத்துவர் அய்யா கூறியுள்ளார்கள்.

இடஒதுக்கீட்டு கொள்கையை எடுத்தேன் கவிழ்த்தேன் என்று அவசரப்பட்டு முடிவெடுக்க முடியாது. இடஒதுக்கீடு பலன் சிந்தாமல் சிதராமல் கிடைக்க மிகவும் கவனம் தேவை என்பதை நான்கு ஆண்டுகளுக்கு முன்பு 06.12.2020 THE HINDU ஆங்கில இதழ் பக்கம் 7ல் VANNIYARS STAND TO LOSE MORE WITH INTERNAL RESERVATION இட ஒதுக்கீட்டின் சாதக பாதகங்களை அரசு நிர்வாகத்தில் நேரில் உணர்ந்த அரசியல் கலப்பின்றி விருப்பு வெறுப்பின்றி தராசு முனையில் கருத்து தெரிவித்துள்ள பழுத்த அனுபவம் பெற்ற அரசு நிர்வாக வர்க்கத்தினர் BUREAUCRATES விவரித்துள்ள விரிவான அலசல்,

20 சதவீதத்தில் மக்கள் தொகை அடிப்படையில் அதிக அளவு பயனாளிகள் (LION'S SHARE) வன்னியர்கள் தான் என்பதை வன்னிய சமுதாய மருத்துவர்கள், வன்னிய சமுதாய பொறியாளர்கள், IAS, IPS போன்ற இன்னபிற துறை குறித்த புள்ளிவிபரங்கள் தெளிவாக்கும். 20 சதவீத பயனை வட மாவட்டங்களில் வன்னியர்களும், தென் மாவட்டங்களில் சீர் மரபினரும் சீரான சமநிலை பயனை இன்றும் அடைந்து வருகிறார்கள். இட ஒதுக் கீட்டில் வன்னிய பயனாளிகள் குறித்து அரசின் சார்பில் வெள்ளை அறிக்கை வெளியிட்டால் உண்மை வெளிச்சத்திற்கு வரும். சமநிலை நின்று எல்லா சமுதாயத்தினரைப் போல வன்னிய சமுதாயத்தின் வயிற்றிலும் பால் வார்த்த தலைவர் கலைஞர் தான் என்பது வெட்ட வெளிச்சமாகும். ஒவ்வொரு பிராந்தி யத்திலும் பெரும்பான்மையாக உள்ள சமூகத்திற்கு உரிய முக்கி யத்துவம் கொடுக்கும் இயக்கம் தி.மு.க. பெரும்பான்மை, சிறுபான்மை என்று இல்லாமல் அனைவரும் ஒருபான்மையாக வாழ வேண்டும் என்று வலியுறுத்தும் இயக்கம் தி.மு.க. எனவே தான் கழகம் அனைத்து சமுதாயங்களின் கூட்ட மைப்பு DMK IS A FEDERATION OF ALL COMMUNITIES என்று வர்ணிக்கப்படுகிறது. சமூகநீதி கிடைக்காமல் தத்தளித்துக் கொண்டிருந்தவர் களுக்கு கைகொடுத்து கரையேற்றிய திராவிட கோட்பாட்டின் இன்றைய பலமான அடித்தளமாக திகழ்வது தான் தி.மு.க. இந்திய அளவில் மண்டல் குழு வழங்கியுள்ள 27 சதவீதத்தையும், தமிழ்நாட்டில் உள்ள 69 சதவீதத்தையும் பாதுகாக்கவேண்டிய பெரும் பொறுப்பு கழகத்தைச்சாரும் அனைத்து சமூகங்களையும், அனைத்து மாவட்டங்களையும், அனைத்து பிரிவினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி தான் எனது நோக்கம் " என தமிழக சட்டமன்றத்தில் தெளிவுபடுத்திய மாண்புமிகு இன்றைய தமிழக முதல்வர், திராவிட அரசியலின் புதிய விடியல் NEW DAWN IN DRAVIDIAN POLITICS என வர்ணிக்கப்படும் சமூகநீதி வழி வந்த இயக்கத்தின் தலைவர், சமூகநீதி சரித்திரநாயகர் தளபதி அவர்களையே சாரும்.

**10.5 சதவீத வன்னியர் உள்ஒதுக்கீடு ; ஒரு கண்ணோட்டம்**

1. முந்தைய ஆட்சியில் கேட்டது 20 சதவீத தனி இடஒதுக்கீடு EXCLUSIVE RESERVATION எதிர்பார்த்தது 13 சதவீதத்திற்கு குறையாமல் கிடைத்தது 10.5 சதவீதம் உள்ஒதுக்கீடு INTERNAL RESERVATION.

2. அதுவும் இந்த உள்ஒதுக்கீடு - ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வழங்கப்படும் என்றும், தொடர்ந்து சாதி வாரி கணக்கெடுப்பு முடிந்த பிறகு பரிசிலிக்கப்படும் என்ற அறிவிப்பு.

3. 10.5 சதவீதம் உள் ஒதுக்கீட்டிற்கு, 20சதவீத இட ஒதுக்கீட்டில் இடம் பெற்றிருந்த ஏனைய சமூகங்களின் கடும் எதிர்ப்பு.

4. இட ஒதுக்கீடு சமூகநீதியில் தான் வழங்கப் பட முடியும். சாதிரீதியாக வழங்க இயலாது என சட்டத்தின் கருத்தாக சொல்லப்படுவது.

5. RESERVION IS PERMISSIBLE ONLY FOR CLASSAES NOT FOR A CASTE

6. எனவே தனிப்பட்ட சாதிக்கு இட ஒதுக்கீடு வழங்க சட்டத்தில் இடமில்லை என்ற சட்டக்கருத்து.

7. 10.5 சதவீத உள்ஒதுக்கீட்டிற்கு மாநில பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் BACKWARD CLASSES COMMISSION பரிந்துரை அவசியம் என்ற நிலை.

8. ஆணையத்தின் பரிந்துரை 10.5 சதவீதத்திற்கு மேற்பட்டிருந்தால் என்ன நிலை எடுப்பது? சமுதாய நலன் பாதிக்காதா? என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

9. THE OPERATIONAL GUIDELINES FOR THE IMPLEMENTATION OF THE 10.5% RESERVATION என்பதற்கு தெளிவான விளக்கம் முந்தைய ஆட்சியின் அறிவிப்பில் இல்லை. அதற்கானத் தரவுகளும் உறுதிப்படுத்தப்படவில்லை.

10. இடஒதுக்கீடு சட்டப்படி உரிய முறையில் வழங்கப்பட்டு உள்ளதா?

11. சட்டம் சரியாக அமலாக்கப்படுகிறதா? என்பதை நீதிமன்றங்கள் தான் கூறமுடியும் என்பதை வலியுறுத்தும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு.

12. முந்தைய ஆட்சியில் வெறும் அறிவிப்போடு இருந்ததை அரசாணையாக்கி செயல்படுத்த முனைந்த ஆட்சி திராவிட மாடல் ஆட்சி.

13. 20சதவீத இடஒதுக்கீட்டில் வன்னி யர்களுக்கு 10.5 சதவீதம், சீர்மரபின ருக்கு 7 சதவீதம், இதர மிகவும் பிற்படுத்த ப்பட்ட வகுப்பினருக்கு 2.5 சதவீதம் சிறப்பு ஒதுக்கீடு தமிழ்நாடு சட்டம் 8/2021ல் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்த அரசாணை வழங்கிய அரசு இன்றைய தமிழக அரசு.

14. 10.5% QUOTA FOR VANNIYARS NOW OFFICIAL.

The DMK Government issued a G.O for implementation of the 10.5% Reservation for Vanniyar Community with Retrospective effect from February26, the date on which the State Thamizh Nadu Assembly passed the bill in the regard. The special Reservation within the 20% MBC Reservation for most Backward Class and Denotified Communites. This will help the Vanniyar Community to improve gradually. Vanniyar 10.5%, DNC 7%, OBC 2.5% within the 20% Quota.

15. வன்னியர்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும் 10.5 சதவீத உள்ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த அரசாணை வெளியிட்ட முதல்வர் அவர்களுக்கு மருத்துவர் ராமதாஸ் தொலை பேசி வாயிலாக நன்றி தெரிவித்தார் (பத்திரிகை செய்தி)

16. வன்னியர் உள்ஒதுக்கீடு : பா.ம.க நேரில் நன்றி ! பா.ம.க. தலைவர் G.K. மணி தலைமை செயலகத்தில் முதல்வரை நேரில் சந்தித்து நன்றி கூறினார். (பத்திரிகை செய்தி).

17. 10.5 சதவீத உள்ஒதுக்கீடு அரசியல் சட்டத்திற்கு புறம்பானது (Unconstitutional) என்று தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் கழக அரசு சார்பில் எடுத்து வைக்கப்பட்ட வாதம் வன்னியர்களுக்கு 10.5 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் சட்டத்தால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை"; தடைவிதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை அழுத்தம் திருத்த மாக தெரிவித்துள்ளது.

18. இட ஒதுக்கீடு தொடர்பான முழு விவரங்கள் அறியாமல் இடஒதுக்கீட்டு கொள்கையை அறிவிப்பது விதிகளை அறியாமல்" விளையாட்டில் இறங்குவது போலாகும் என்றும் எனவே உரிய தரவுகளைத் திரட்டி வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கலாம்; அதற்கு எந்தத்தடையும் இல்லையென்றும் நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கியுள்ளன.

19. உச்சநீதிமன்ற தீர்ப்பையொட்டி தமிழக அரசு சார்பில் உருவாக்கப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் இன்னும் தனது பரிந்துரை அறிக்கையை அளிக்கவில்லை., அதன் பரிந்துரையின் அடிப்படையில் தான் சட்டம் இயற்ற முடியும். (குறிப்பு: ஆணையம் கேட்டுள்ள தரவுகள் அனைத்தையும் திரட்டித் தமிழக அரசு அளித்துள்ளது.)

20. சாதி வாரி கணக்கெடுப்பை மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்பணியில் முன்அனுபவம் பெற்ற ஒன்றிய அரசு எடுப்பது தான் சரியானதாகவும், நம்பகமானதாகவும், நீதி மன்றத்தால் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையிலும் அமையும்.

21. ஒன்றிய அரசு இந்த சாதிவாரி கணக்கெடுப்பை விரைந்து எடுக்க வலியுறுத்தி அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டத்தில் கழக நாடளுமன்ற இரு அவைகளின் குழுத்தலை வர்களான முறையே திரு. டி.ஆர். பாலு அவர்களும், திருச்சி என்.சிவா அவர்களும், வலியுறுத்தியுள்ளனர்.

22. சாதிவாரி மக்கள் தொகை கணகெடுப்பு நடத்த வேண்டும் என்று ஒன்றிய அரசை மாநிலங்கள் அவையில் மருத்துவர் அன்புமணி அவர்களும் வலியுறுத்தியுள்ளார்

23 தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்" தான் என்ற விடாப்பிடி மனநிலையிலிருந்து விடுபட்டு இயல்பு நிலைக்கு வருவது தான் சமுதாய நலனுக்கு உகந்ததாக அமையும்.

24. இன்றும் 20 சதவீதத்தில் கிடைத்துக்கொண்டிருக்கும் பயன் 10.5 சதவீதத்தில் கிடைக்காது ; அது ஒரு கானல் நீர் என்ற எதார்த்த நிலைக்கு வரவேண்டும்.

25. எனவே பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையைப் பெற்று இன்றையச் சூழலுக்கு ஏற்ப உரி உள்ஒதுக்கீடு " வழங்க வேண்டும் என்ற கோரிக்கை தான் சமுதாயத்திற்குப் பயனாக அமையும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அதை விடுத்து இந்தப் பிரச்சனையில் அரசியல் ஆதாயம் தேட முயற்சித்தால் அது வன்னியர் சமூகத்தின் முன்னேற்னேற்றத்திற்கு பெரும் கேடாக துரோகமாக அமையும் .

10.12.2024 அன்று நடைபெற்ற சட்டமன்ற கூட்ட விவாதத்தில் பா.ம.க சட்டமன்றக் கட்சித் தலைவர் ஜி.கே. மணி அவர்கள் வன்னியர்களுக்கு 10.5ரூ உள்ஒதுக்கீடு வழங்குவதற்கு சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று கூறுவது ஏற்புடையது அல்ல என்று பேசியுள்ளார்.

ஜி.கே. மணி அவர்களின் கருத்துக்கு அமைச்சர்கள் எஸ்.எஸ்.சிவசங்கரும், சிவ.வீ. மெய்யநாதனும் சட்டமன்றத்தில் மறுப்புரைத்துள்ளது. வருமாறு.

உச்சநீதிமன்றம் உரிய தரவுகளின் அடிப்படையிலேயே இந்த இடஒதுக்கீட்டை வழங்க வேண்டும் என்று கூறியுள்ளது. அதற்கு மக்கள் தொகை கணக்கெடுப்பும் சாதி வாரி கணக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும். இந்தக் கணக்கெடுப்பை ஒன்றிய அரசு தான் எடுக்க முடியும். பா.ஜ.க கூட்டணியில் இடம்பெற்றுள்ள பா.ம.க அதற்கு அழுத்தம் கொடுத்து சாதி வாரி கணக்கெடுப்பு நடத்த சொன்னால் தான் சமூகநீதி நிலை நாட்டப்படும் "என்று அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள் தனது பதில் உரையில் குறிப்பிட்டு உள்ளார்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20ரூ இட ஒதுக்கீடு வழங்கியவர் தலைவர் கலைஞர் அதை எதிர்த்து நீதிமன்றத்திற்குப் போய் வெல்ல முடியவில்லை அதுபோல அருந்ததியினருக்கு 3ரூ உள்ஒதுக்கீட்டை வழங்கியவர் தலைவர் கலைஞர் அதையும் எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்று முடக்க முடியவில்லை.

10.5 % உள்ஒதுக்கீடு தேர்தல் நேரத்தில் அவசர கதியில் கொண்டு வரப்பட்டதால் உள்ஒதுக்கீட்டிற்கான சட்டம் நீதிமன்றத்தால் நிராக ரிக்கப் பட்டது. எனவே தகுந்த புள்ளிவிவ ரத்தோடு இந்த சட்டத்தை அறிவித்திருக்க வேண்டும் என்று நீதிமன்றம் தெளிவாக சொல்லியுள்ளது. அந்தப் புள்ளி விபரம் பெறுவதற்கு சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அதை செய்ய வேண்டியது உங்களது கூட்டணியில் உள்ள ஒன்றிய அரசு தான். அங்கே பேசுவதை விட்டுவிட்டு இங்கே பேசி நாட்டு மக்களை குழப்பக்கூடாது" என்று அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் குறிப்பிட்டு உள்ளார்.

ஜி.கே.மணி அவர்கள் வன்னியர்களுக்கு உள்ஒதுக்கீடு வழங்குவதற்கு சாதி வாரி கணக்கெடுப்புத் தேவை என்று அமைச்சர் கூறினார். இதற்கு முன்பு அளிக்கப்பட்ட இஸ்லாமியர் உள் ஒதுக்கீடு, அருந்ததியர் உள்ஒதுக்கீடு, மிகவும் பிற்பட்டோருக்கான இடஒதுக்கீட்டிற்கு எல்லாம் சாதி வாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு தான் கொடுக்கப்பட்டதா?" என்று கேட்டுள்ளார்.

உரிய தரவுகளைத் திரட்டி வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கலாம்; அதற்கு எந்த தடையும் இல்லை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தும், வன்னியர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க முடியாது என்று தெரிவித்து முதல்வர் துரோகம் இழைத்திருக்கிறார் என்று அறிக்கை விடுத்துள்ள மருத்துவர் அய்யா அவர்களுக்கு சட்டமன்றத்தில் பதில் அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் வன்னியர்களுக்கான 10.5 சதவீத உள்ஒதுக்கீடு சட்டத்தைக் கொண்டு வந்த போது முறையாகக் கொண்டு வரவில்லை . இருப்பினும் தி.மு.க ஆட்சிக்கு வந்த பிறகு அந்த தவறை திருத்தி நாங்கள் நிறை வேற்றுவதற்கு தயாராக இருக்கிறோம் " என்று கூறித்தான் அமல்படுத்தினோம். ஆனால் உச்சநீதிமன்றத்திற்குச் சென்று தடை பெற்றிருக்கும் நிலை உள்ளது. இது யாருடைய தவறு? என்ற பொருள் பொதிந்த கேள்வியை எழுப்பி தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

இவற்றை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்து கருத்தில் கொள்ள வேண்டியது :

மருத்துவர் அவர்களின் பிறந்த நாளுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர்

அவர்கள் தெரிவித்த வாழ்த்துக்கு உங்கள் தந்தை கலைஞர் என்னுடன் மிகவும் நெருக்கமான நட்பு கொண்டிருந்தார். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட

மக்களின் நலன்களுக்காக பல திட்டங்களை அவர் செயல்படுத்தினார்.

உங்கள் தந்தையின் அந்த இடத்தை நீங்கள் பிடிக்க வேண்டும் "என்று மருத்துவர் அய்யா அவர்களின் பாராட்டை பெற்றவர் தமிழக முதல்வர் மாண்புமிகு தளபதி அவர்கள்.

தலைவர் கலைஞர் அவர்களால் வகுப்பு வாரி தொகுப்பு " இடஒதுக்கீடு முறையை திறம்பட வகுத்து பின்பற்றி வழங்கப்பட்டுள்ள 20 சதவீத இடஒதுக்கீட்டில் எந்த மாற்றத்தையும் செய்யாமல் தொடருவது தான் நன்மை பயக்கும் செயலாக அமையும். THIS WILL HELP THE VANNIYAR COMMUNITY TO IMPROVE GRADUALLY வன்னியர் சமுதாயம் முறையாக முன்னேற வழிவகுக்கும் என்பது சமூக ஆர்வலர்களின் விழைவாகவும், உயரிய கண்ணோட்டமாகவும் உள்ளது.

தற்போதும் நடைமுறையில் உள்ள 20 சதவீத இடஒதுக்கீடு தொடர்ந்தால் தான், நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி, புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம். " என்ற அவ்வையார் வாக்குக்கு ஏற்ப 108 சமுதாயங்களும் நேர்ந்து நிரந்து இடஒதுக்கீடு நீரை தொடர்ந்து அருந்திவர முடியும்.

எனவே 10.5 சதவீத உள்ஒதுக்கீடு வன்னியர்களுக்கு போதிய பலன் அளிக்காது என்றால்? கிடைத்துக் கொண்டிருப்பதும் குறையுமென்றால்? உரிய உள்ஒதுக்கீட்டை

அடையும் வரை அறிவார்ந்த கிறிஸ்துவ சமுதாயம் தங்களுக்கான 26.5 சதவீத இடஒதுக்கீட்டிலேயே நீடிக்க விரும்புகிறோம் என்ற நிலையை எடுத்துள்ளதைப் போல

எந்தவிதமான மனஒதுக்கலுக்கும், இடமளிக்காமல் முடிவெடுத்து (without prejudice) நெஞ்சம் நிறைந்த தலைவர் கலைஞர் வழங்கிய 20 சதவீத இடஒதுக்கீடு தான் வன்னியர், சீர்மரபி னர் உள்ளிட்டோருக்கு பொன்முட்டையிடும் வாத்தாக தொடர் பயனளிக்கும் என்ற நிலைக்கு சமுதாய நலன் கருதி வருவது தான் சாலச்சிறந்ததாகும்.

---

## புதுக்கோட்டை - திருமயம் ஒன்றியத்தில்

# "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம்!

### அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, முனைவர் கோவி.செழியன் துவக்கி வைத்தனர்!

*புதுக்கோட்டை, டிச.23-*

*புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், மேலூர் வருவாய் கிராமம், வெள்ளிக்குடிப்பட்டி குக்கிராமத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாமில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 20.12.2024 அன்று மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்து, பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.*

*பின்னர், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது;*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் நலன் காக்கும் வகையில் மக்கள்நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையில், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல்கல்லாக "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.12.2023 அன்று தொடங்கி வைத்தார்கள்.*

*அதனைத்தொடர்ந்து, இத்திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.07.2024 அன்று ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தி தொடங்கி வைத்தார்கள். இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 11.07.2024 முதல் 10.09.2024 வரை 13 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 495 கிராம ஊராட்சிகளில் 66 "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம்கள் நடத்தப்பட்டது. அதன்படி, இன்றையதினம் திருமயம் வட்டம், மேலூர் வருவாய் கிராமம், வெள்ளிக்குடிப்பட்டி குக்கிராமத்தில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம் நேரில் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டை பெறுவதற்கான 6 நகல் அட்டைகளும், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டை பெறுவதற்கான 2 நகல் அட்டைகளும் வழங்கப்பட்டது.*

*இம்முகாம்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, கூட்டுறவுத் துறை, எரிசக்தித்துறை உள்ளிட்ட பல்வேறு 15 அரசுத் துறைகள் சார்ந்த 44 சேவைகள் வழங்கப்படுகிறது. இம்முகாம்களில் பெறப்பட்ட அனைத்து மனுக்களும் சம்பந்தப்பட்ட துறைகளால் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் வழங்கப்பட்டு தீர்வு காணப்படுகிறது.*

*எனவே இம்முகாம்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.*

*பின்னர், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்ததாவது;*

*தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு பல்வேறு மக்கள்நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் பொதுமக்களுக்கு சென்று சேரும் வகையில் "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் மூலம் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊரக பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் சென்றடையும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப் படுகிறது.*

*இம்முகாமில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப் பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, எரிசக்தித்துறை, உள் மதுவிளக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை (கலால்), தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, வேளாண்மை உழவர் நலத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை உள்ளிட்ட 15 அரசுத் துறைகள் சார்ந்த 44 சேவைகள் வழங்கப்படுகிறது.*

*எனவே பொதுமக்கள் அனைவரும் தங்களது அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில், இம்முகாம்களை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அ.ஷோபா, ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், திருமயம் வட்டாட்சியர் புவியரசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆர். சங்கர், பி.வெங்கடேசன், இரா. கணேசன் , ஊராட்சி மன்றத் தலைவர் (மேலூர்) ச.லதா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.*

---

## கே.கே.செல்லபாண்டியன் தலைமையில்

# புதுக்கோட்டை கீரனூரில் ஆர்ப்பாட்டம்!

## கழகத்தினர் பங்கேற்பு!

*புதுக்கோட்டை, டிச.23-*

*இந்திய அரசியலைமப்புச் சட்டத்தை வடிவமைத்த சட்டமேதை, புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களை அவமதித்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து, புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கீரனூரில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*குன்றாண்டார்கோவில் ஒன்றிய பெருந்தலைவர் கே.ஆர்.என்.போஸ், மாவட்ட கவுன்சிலர் த.செல்வம், ஒன்றிய செயலாளர்கள் என்.சேட்டு, ஓ.எஸ்.வெங்கடாசலம், சி.சண்முகம், கீரனூர் பேரூர் கழக செயலாளர் பி.அண்ணாதுரை, கீரனூர் பேரூராட்சி தலைவர் கே. எம்.கே.ரவிக்குமார், துணை தலைவர் எம்.ஏ.எம்.இம்தியாஸ், மாவட்ட பிரதிநிதி வி.எஸ்.பழனி, கீரனூர் பேரூராட்சி கவுன்சிலர்கள் கோ.ரவிச்சந்திரன், பி.சின்னத்துரை, கந்தர்வக்கோட்டை தொகுதி சமூக வலைதள பொறுப்பாளர் எழில் ராஜா, நகர இளைஞரணி அமைப்பாளர் சி.ரமேஷ், நகர தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சித்திரை செல்வம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று கண்டன கோஷங்களை எழுப்பினர்.*